



ஆன்மிக சிகரத்தின்

# நம்ம ஊரு நியூஸ்

RNI No: TNTAM/2017/75122

Editor: V.S.N.Sharma | Chief Reporter : S.Esakki | Chennai : 9710755689 | 9962505384 | 4 பக்கம் | 5.3.2026 வியாழக்கிழமை ★★





## கூட்டணி பேச்சுவார்த்தையில் திமுக-காங்கிரஸ் இடையே உடன்பாடு:

# காங்கிரஸுக்கு 28 தொகுதிகள்

சென்னை,மார்ச் 5: சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸுக்கு 28 தொகுதிகள், ஒரு மாநிலங்களவை (ராஜ்யசபா) உறுப்பினர் இடத்துக் கான ஒப்பந்தம் நேற்று கையெழுத்தானது.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. கூட்டணி கட்சிகளுடனான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை திமுக கடந்த பிப்ரவரி 22-ம் தேதி தொடங்கி நடத்தி வருகிறது. இது வரை காங்கிரஸ், மதிமுக, கம்யூனிஸ்ட்கள், விசிக உட்பட தோழமை கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இதில் முஸ்லீம் லீக், மமக ஆகிய கட்சிகளுக்கு தலா 2 இடங்கள் வரை ஒதுக்கப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதேபோல், தேமுதிகவுக்கு ஒரு மாநிலங்களவை உறுப்பினர் இடத்துக்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இதர கட்சிகளுக்கான பங்கீடு ஓரிரு நாட்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், காங்கிரஸ் 40 தொகுதிகள், 2 மாநிலங்களவை உறுப்பினர் கேட்டதால், தொகு திப் பங்கீட்டில் இழுபறி நீடித்தது. காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் கே. சி.வேணுகோபால் பேச்சுவார்த்தை நடத்தியும் தீர்வு எட்டப்படவில்லை. இதனால் திமுக - காங்கிரஸ் இடையேயான கூட்டணி நீடிக்குமா என்ற கேள்விகள் எழுந்தன. இந்த சூழலில் நேற்று முன்தினம் காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம், முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் சந்தித்து சமரச பேச்சுவார்த்தை நடத்தினார். தொடர்ந்து காங் கிரஸ் தேசிய தலைமையிடமும் அவர் பேசி சூழலை சுமூகமாக்கியதாகவும், திமுக தரப்பில் கனிமொழியும் காங்கிரஸ் தலைவர்களிடம் பேசியதாக கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, திமுக - காங்கிரஸ் இடையே நீண்ட நாட்களாக நீடித்து வந்த தொகுதி பங்கீடு பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளது. இருதரப்பினரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட இருப்பதாக நேற்று காலை தகவல்கள் வெளியாகின. அதன்படி, கோவாவில் இருந்து விமானம் மூலம் காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் சென்னைக்கு நேற்று மாலை வந்தார். அவரை தமிழக காங் கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை வரவேற்றார்.

சிறிது நேரத்தில் விமான நிலையத்தில் இருந்து காரில் புறப்பட்ட கிரிஷ் சோடங்கர், செல்வப்பெருந்தகை ஆகியோர் தி.நகரில் உள்ள ஓட்டலுக்கு சென்றனர். தேனாம் பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வந்த தகவல் கிடைத்ததும், இருவரும் அறிவாலயத்துக்கு சென்றனர். அப்போது, திமுக வழங்கிய 28 சட்டப் பேரவை தொகுதிகள் மற்றும் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் இடத்தை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. இதற்கான ஒப்பந்தத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின், செல்வப்பெருந்தகை கையெழுத்திட்டனர்.

திமுக தரப்பில் அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை பொதுச் செயலாளர்கள் கனிமொழி, ஆ.ராசா, திருச்சி சிவா, பூச்சி எஸ். முருகன் மற்றும் காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், அகில இந்திய செயலாளர் நிவேதித் ஆல்வா, தமிழக சட்டப் பேரவை காங்கிரஸ் குழுத் தலைவர் எஸ்.ராஜேஸ்குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திமுகவுடன் கூட்டணி அமைத்த காங்கிரஸ் 25 இடங்களில் போட்டியிட்டு 18 இடங்களில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

கூட்டணி கட்சிகள்: இந்திய கம்யூனிஸ்ட், மக்கள் நீதி மய்யம், ஆம் ஆத்மி ஆகிய கட்சிகளுடனும் திமுக தொகுதிப் பங்கீட்டுக் குழு நேற்று பேச்சு வார்த்தை நடத்தியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடன் நடத்தப் பட்ட 2-ம் கட்ட பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை. கடந்த 2021 தேர்தலை போல் 6 இடங்கள் வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்பதாலும், புதிய கட்சிகள் கூட்டணிக்கு வந்துள்ளதால் தொகுதிகளை குறைத்துக் கொள்ள திமுக வலியுறுத்தியதாலும் முடிவு எட்டப்படவில்லை. மக்கள் நீதி மய்யம் 3 தொகுதி கேட்ட நிலையில், ஒரு இடம் மட்டும் வழங்கப்படும். அதுவும் உதயசூரியன் சின்னத்தில் நிற்க வேண்டும் என்று திமுக குழு தெரிவித்துள்ளது. ஆம் ஆத்மியும் 2 தொகுதிகள் கேட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

### ஸ்ரீஅய்யனார் கோவில், ஸ்ரீஅய்யனார் டிரஸ்ட், ஸ்ரீமுத்துமாரியம்மாள் நித்ய அன்னதான சேவா சார்பில்

# மூன்று தலைமுறையாக மஹா அன்னதானம்

### ஸ்ரீகோனியம்மன் தேர் திருவிழாவையொட்டி ஸ்ரீஅய்யனார் ஆதீனம் வழங்கினார்

கோவை, மார்ச் 5: கோவையின் காவல் தெய்வமான அருள்மிகு ஸ்ரீகோனியம்மன் திருக்கோவில் தேர் திருவிழாவையொட்டி,கோவை ஸ்ரீ அய்யனார் சுவாமி திருக்கோவில் , ஸ்ரீ அய்யனார் டிரஸ்ட், ஸ்ரீ முத்துமாரியம்மாள் நித்ய அன்னதான சேவா, ஸ்ரீ அய்யனார் ஆதீனம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹரஸ்ரீ ஸ்ரீனிவாசசுவாமிகள் சார்பில் ஸ்ரீ அய்யனார் சுவாமி ஆசியோடு மஹா அன்னதானம் மிக சிறப்பாக நடைபெற்றது.

பெரிய கடைவீதியில் அமைந்துள்ள ஸ்ரீ அய்யனார் டிரஸ்ட் அலுவலகத்தில் நடைபெற்ற மஹா அன்னதான விழாவில் ஸ்ரீ அய்யனார் ஆதீனம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹரஸ்ரீ ஸ்ரீனிவாச சுவாமிகள் பக்தர்களுக்கு திருக்கரங்களால் சக்கரை பொங்கல், சோயா பிரியாணி , புளி சாதம் , தண்ணீர் பாட்டில்கள் மற்றும் நீர் மோர் வழங்கி "அன்னதானம் மகாதானம்" என்ற உயர்ந்த பண்பை தனது செயலால் வெளிப்படுத்தி அருள் ஆசி வழங்கினார். இந்நிகழ்வு பக்தி பூர்வமாக பக்தர்கள் அனைவராலும் வரவேற்கப்பட்டது.



பசிப்பிணியை போக்குவோம், வறுமையை ஒழிப்போம் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் செயல்படும் இவர்கள் தொடர்ந்து மூன்று தலைமுறையாக அன்னதானம் வழங்கி வருகின்றனர். இது மட்டுமல்லாமல் மற்ற கோயில்களுக்கு அன்னதானம் கும்பாபிஷேகம் செய்யும் இந்தியாவிலேயே ஒரே கோயில் ஸ்ரீ அய்யனார் சுவாமி திருக்கோயில் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னதான ஏற்பாடுகள் அனைத்தும் ஸ்ரீஅய்யனார் சுவாமி திருக் கோயில், ஸ்ரீ அய்யனார் ஆதீனம் திருமடம், ஸ்ரீஅய்யனார் டிரஸ்ட் மற்றும் ஸ்ரீமுத்துமாரியம்மாள் நித்ய அன்னதான சேவா சார்பில் செய்யப்பட்டது. பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்துறையினர் மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.


அதர்மத்தை அகற்றிட! ஒன்றுபடுவோம்!! வென்றுவருவோம்!!!

ஸ்ரீ பைரவ சேனைகள் அறக்கட்டளை

கோவிலம்பாக்கம், சென்னை - 600 129.

கௌரவத் தலைவர்கள்

T.நடராஜன் K.முருகேசன் A.V.செந்தில் ராஜன் M.நாராயணன் A.சக்திவேல்

தலைவர்: P.ராமகிருஷ்ணன் 9444317157
செயலாளர்: T.ரவிசந்திரன் 9940536827
பொருளாளர்: S.அருண்குமார் 9994641239

துணை தலைவர்: நாஞ்சில் C.மனோகரன்
துணை செயலாளர்: T.சுயம்புலிங்கம்
துணை செயலாளர்: R.V.கணேசன்

ஆலோசகர்கள்: துலசை A.சிதம்பரம் காமதேனு G.சுந்தர் சிங்
மக்கள் தொடர்பு: தசரா நாயகி M.ஆனந்த், இசக்கி சுடலை
இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர்கள்: T.ஏழுமலை



## லெப்பைக்குடிக்காடு பேரூராட்சி பகுதியில்

# ரூ.45 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையம் கட்டிடம் திறப்பு

பெரம்பலூர், மார்ச் 5: பெரம்பலூர். தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், பெரம்பலூர் நகராட்சிக் குட்பட்ட பகுதியில் ரூ.63 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள விலங்குகள் கருத்தடை மையக் கட்ட டத்தினையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை சார்பில், லெப்பைக்குடிக்காடு பேரூராட்சி பகுதியில் ரூ.45 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையம்கட்டடத்தினையும் காணொலிக் காட்சி வாயிலாக நேற்று திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ் வினை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி, லெப்பைக்குடிக்காடு பேரூராட்சிக்குட்பட்ட ஜமாலியா நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையத்திலிருந்து நேரலையில் பார்வையிட்டு குத்து விளக்கேற்றி பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். மேலும், பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.63 லட்சம் மதிப்பில்புதிதாககட்டப்பட்டுள்ள விலங்குகள் கருத்தடை மையக் கட்டிடத்தினை பார்வையிட்டு குத்துவிளக் கேற்றினார்.

குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட லெப்பைக்குடிக்காடு பேரூராட்சி ஜமாலியா நகரில் 15 வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் இந்த துணை சுகாதார நிலையம் கட்டப் பட்டுள்ளது. இதன் மூலம் லெப்பைக்குடிக்காடு வடக்கு சுகாதார நிலை யத்திற்கு உட்பட்ட 10,744 கிராம மக்கள் மற்றும் சுற்று வட்டார கிராம மக்களுக்கு தரமான முதன்மை சுகாதார சேவைகள், கர்ப்பிணி மற்றும் குழந்தைகள் நல சேவைகள், தடுப்பூசி சேவைகள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சேவைகள் மேலும் மேம்படுத்தப்பட்ட வசதிகள் வழங்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேபோல பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட ஆத்தூர் சாலையில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.63 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள விலங்குகள் கருத்தடை அறுவை சிகிச்சை மையத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, தெரு நாய்களுக்கான கருத்துடைகள் மேற்கொள்ளப்பட வுள்ளது.

இம்மையத்தில், விலங்குகள் அறுவை சிகிச்சை அரங்கம், கிருமி நாசினி அறை, மருத்துவர் அறை, மருந்துகள் வைப்பறை, உதவியாளர் அறை மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின்பு விலங்குகளை தங்க வைத்தல் வசதி போன்ற உட்கட்டமைப்புகளுடன் இந்தை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் தெரு நாய்களின் எண்ணிக்கையை முறை யாகக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தலைக் குறைக்கவும் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் "நாய்கள் கருத்தடை (ABC - Animal Birth Control) மற்றும் தடுப்பூசித் திட்டம்" தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தெரு நாய்களின் எண்ணிக்கையை மனிதாபிமான முறையில் கட்டுப்படுத்துதல், வெறிநாய் நோய் (Rabies) பரவாமல் தடுத்து, பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், நாய்களுக்கு இடையே ஏற்படும் சண்டைகள் மற்றும் ஆக்ரோஷமான குணத்தைக் குறைத்தல் போன் றவையே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதனடிப்படையில், தெரு நாய்களுக்கான இனப் பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில், தெருவில் சுற்றித் திரியும் ஆண் மற்றும் பெண் நாய்களுக்கு இனப் பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை இலவசமாக செய்யப்படும். அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நாய்களின் காதுகளில் சிறிய 'V' வடிவ அடையாளம் இடப்பட்டிருக்கும். இத்தகைய நாய்களை மீண்டும் கருத்தடை செய்யத் தேவையில்லை.

பெரம்பலூர் நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிளில்காது அடையாளம் இல்லாத நாய்கள் இருந்தால், கால்நடை பராமரிப்புத் துறையால் செயல்படுத்தப் படும் சமூக நாய்களுக்கான இனப்பெருக்ககட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மையத்திற்கு நாய்களை கொண்டு செல்லலாம். நாய்களுக்கு உணவளிப்பவர்கள், அறுவை சிகிச்சை முடிந்து திரும்பும் நாய்களுக்குச் சில நாட்கள் கூடுதல் கவனம் செலுத்துவது அவற்றின் விரைவான குணமடைதலுக்கு உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர் க. கண்ணன், அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், நகர்மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் மரு. பேபி நிர்மல், மாவட்ட சுகாதார அலு வலர் (பொ) மரு. சுப்பிரமணி, லெப்பைக் குடிக்காடு பேரூராட்சி செயல் அலு வலர் ருக்மணி, நகர்மன்ற துணைத்தலைவர் ஆதவன், லெப்பைக்குடிக்காடு பேரூராட்சி மன்ற துணை தலைவர் ரசூல் அஹமது உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## பெரம்பலூரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின்

# அம்பேத்கர், பெரியார் சிலைக்கு மாலை அணி மரியாதை

பெரம்பலூர், மார்ச் 5: பெரம்பலூர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியின் புதிய ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் புரட்சியாளர் அம்பேத்கர் மற்றும் தந்தை பெரியார் ஆகியோரின் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நேற்று மாலை 5.00 மணிக்கு கட்சியின் மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கட்சியின் மண்டல செயலாளர் ஸ்டாலின், மண்டல துணைச் செயலாளர் மன்னர் மன்னன், மேனாள் மாவட்ட செயலாளர் இரத்தின வேல், கட்சியின் பொருளாளர் சிறுவாச்சூர் பிச்சை பிள்ளை, மாவட்ட செய்தித் தொடர்பாளர் அ.இ.அழகுமுத்து, இளைஞர் எழுச்சி பாசறை மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் கரு. அய்யம் பெருமாள்,மாவட்ட துணைச் செயலாளர்கள் தங்க.சண்முகசுந்தரம், வெற்றியழகன், இடி முழக்கம், அய்யாக் கண்ணு, கேட்.மணி, சங்கீதா , நிர்வாக குழு உறுப்பினர்கள் தழுதாழை பாலு, ஸ்டாலின்லால், மகளிர் விடுதலை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் ரேணுகா வேல்முருகன், மாநில துணைச் செயலாளர்கள் பேராசிரியர் தமிழ்குமரன், கராத்தே. பெரியசாமி, ஆசிரியர் செல்வாம்பாள், அம்பேத் கோகுல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் கட்சியின் ஒன்றிய செயலாளர்கள் இராதாகிருஷ்ணன், வடிவேல் பழனி முத்து, கவியரசன், சதீஷ்குமார் மாஸ். மணி, நகரச் செயலாளர்கள் தென்றல் சரண்ராஜ், தங்க. இளவர சன், துரைமுருகன், வழக்கறி ஞர் அருண், பழனிவேல் , தினேஷ் ராஜா, ராஜன், கோவிந்தராஜ், ஜெயராமன், பாலன், பிச்சைபிள்ளை, சக்தி, சிவராமன், அழகு ராஜா, சங்கர், வடிவேல், ராஜ்குமார், ராஜேந்திரன், சக்திவேல், தேவேந்திரன், மாதேஸ்வரன், பிரசாந்த், சூர்யா, சையது அலி, சிபி, சோலன், குமார், வெற்றி மாறன்,சத்தியசீலன், பார்த்திபன், சிறுவாச்சூர் மாரி முத்து, செல்வகுமார், சாக்கிய வர்ணன், மகளிர் விடுதலை இயக்கத்தின் பொறுப்பாளர் வீர லெட்சுமி, ராசாத்தி, திலகவதி, வான்மதி, உஷா,சத்தியகலா, ஆழ்வார்,தமிழரசன், தீரன், மணிமாறன்,சூர்யா, ஹரிஷ், ஆகாஷ், மாஸ் மணி,(எ) பெ.மணிகண்டன், குமரேசன், சுப்பிரமணி, செல்வம், ராஜேந்திரன்,அருண்,மதி ,வேலு ,சுரேஷ், பாரதி கோவிந்தன், ராகுல் ராம மூர்த்தி, கர்ணன், மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சேர்ந்த பொறுப்பாளர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.




கண்ணீர் அஞ்சலி

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம்,
நெற்குணம் கிராமத்தைச் சேர்ந்த
திரு.**கண்ணன்** (லேட்) திருமதி.**இளவேணி**
அவர்களின் இளைய மகனும்
**க.சுதாகர்** வனத்துறை ஆய்வாளர்
அவர்களின் சகோதரரும்

**க.பிரசாத்** M.Sc.,GEOLOGYST
**PRO ( PRIYAM HOSPITAL)**

அவர்கள் இன்று காலை 9.00 மணி அளவில் உடல் நலக்குறைவால் காலமானார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய அவர்களின் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

கண்ணீருடன்...

குடும்பத்தார்கள், உறவினர்கள், ஊர் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள், நெற்குணம்





## பெரம்பலூர் கலெக்டர், எஸ்.பி முன்னிலையில் வழக்குகளில் கைப்பற்றப்பட்ட

# 1,069 கிலோ குட்கா, பான்மசாலா, கூலிப் தீயிட்டு அழிப்பு!

பெரம்பலூர், மார்ச் 5: பெரம்பலூர் மாவட்டத்தில் காவல் துறையினர் மற்றும் உணவுப் பாதுகாப்புத்துறையினரின் பல்வேறு ஆய்வுகளின்போது மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 1,069 கிலோ எடையுள்ள தடை செய்யப்பட்ட குட்கா, பான்மசாலா, கூலிப், உள்ளிட்ட பொருட்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.சி. அனிதா அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நேற்று (04.03.2026) நெடுவாசல் சாலை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் ஆழக்குழி தோண்டி கொட்டி எரித்து அழிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, பான்மசாலா, கூலிப், உள்ளிட்ட பொருட்களை யாரும் எங்கும் வாங்கவோ விற்கவோ கூடாது என தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுவருகின்றது. இத்தகைய பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், தடைசெய்யப்பட்ட பொருட்களை தயாரித்தல், சேமித்து வைத்தல், விநியோகித்தல், வாகனங்களில் எடுத்து செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகிறது.

இந்நிலையில் பெரம்பலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் 62 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 207.075 கிலோ அரசால் தடைசெய்யப்பட்ட உணவு கலந்த புகையிலை பொருட்கள், பாடாலூர் காவல் நிலையத்தில் 51 வழக்குகளில் கைப்பபற்றப்பட்ட 112.258 கிலோ, அரும்பாவூர் காவல் நிலையத்தில் 21 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 20.425 கிலோ , மருவத்தூர் காவல் நிலையத்தில் 34 வழக்குகளில் கைப்பபற்றப்பட்ட 350.087 கிலோ அரசால் தடைசெய்யப்பட்ட உணவு கலந்த புகையிலை பொருட்களும், குன்னம் காவல் நிலையத்தின் மூலம் 96 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 142.196 கிலோ, பெரம்பலூர் வட்டார காவல் நிலையத்தில் 22 வழக்குகளில் கைப்பபற்றப்பட்ட 34.511 கிலோ, மங்களமேடு காவல் நிலையத்தில் 76 வழக்குகளில் கைப்பபற்றப்பட்ட 148.931 கிலோ, வி.களத்தூர் காவல் நிலையத்தில் 45 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 45.57 கிலோ, கை, களத்தூர் காவல் நிலையத்தில் 20 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 8.32 கிலோ அரசால் தடைசெய்யப்பட்ட உணவு கலந்த புகையிலை பொருட்களும் என பெரம்பலூர் மாவட்ட அளவில் 9 காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 427 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட அரசால் தடை செய்யப்பட்ட உணவு கலந்த புகையிலை பொருட்களான ஹான்ஸ், கூல்லிப், விமல், ஏ-1 பான்மசாலா, ஸ்வாகத், ஏ-1 டொபோக்கோ உள்ளிட்ட 1069.373 கிலோ எடையுள்ள புகையிலை பொருட்களை பெரம்பலூர் அருகே நெடுவாசல் சாலை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் முன்னிலையில் ஆழக்குழிதோண்டி கொட்டி எரித்து அழிக்கப்பட்டது. முழுவதும் எரிந்த பின்னர் மீண்டும் மண்ணிட்டு குழி மூடப்பட்டது. இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலமுருகன், நியமன அலுவலர் உணவு பாதுகாப்புத்துறை மரு. சுகந்தன் , உணவு பாதுகாப்பு அலுவலர்கள் கதிரவன்,சின்னமுத்து, புவனா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோவையில் கோனியம்மன் கோவிலில் தேரோட்டம்; ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்



கோவை, மார்ச் 5: கோவை கோனியம்மன் கோவில் தேரோட்டம்; சிறப்பு அலங்காரத்தில் புறப்பட்டு எழுந்தருளிய அம்மன்; ஏராளமான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்து சாமி தரிசனம்

கோவை, கோனியம்மன் கோவிலில் திருக்கல்யாண நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இன்று தேரோட்டம் நடைபெற்று வருகிறது. இதில் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

கோவையின் காவல் தெய்வம் என்று போற்றப்படும் கோனியம்மன் கோவில் தேர்த் திருவிழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. கோவை, பெரிய கடை வீதியில் உள்ள கோனியம்மன் கோவி லில் இந்த ஆண்டுக்கான தேர்த் திருவிழா கடந்த மாதம் 17 ஆம் தேதி பூச்சாட்டு விழாவுடன் தொடங்கியது. தொடர்ந்து 24 ஆம் தேதி கொடியேற்றப்பட்டு அன்று இரவு அக்னிச்சாட்டு நடைபெற்றது.

தேர் திருவிழாவை ஒட்டி அம்மனுக்கு நாள்தோறும் சிறப்புபூஜைகள், அபிஷேகம் நடைபெற்றன. மேலும் அம்மன் ஒவ்வொரு நாளும் புலி வாகனம், கிளி வாகனம், சிம்ம வாகனம், அன்ன வாகனம், காமதேனு வாகனம், வெள்ளை - யானை வாகனத்தில் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

விழாவை ஒட்டி ஏராளமான பக்தர்கள் நாள்தோறும் கோவிலுக்கு வந்து அம்மனை வழிபட்டுச் சென்றனர். மேலும் பக்தர்கள் அங்கு உள்ள அக்னி கம்பத்திற்கு புனித நீர் ஊற்றி வழிபட்டனர். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருக்கல்யாணம் நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது.

இதை ஒட்டி காலை 7 மணிக்கு உற்சவ அபிஷேக, அலங்கார பூஜை நடந்தது. பின்னர் கோவில் வளாகத்தில் உள்ள முருகன் சன்னதி அருகே அம்மன் திருக்கல்யாணம் நிகழ்ச்சி நடைபெற்றது. அம்மன் பட்டு உடுத்தி சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளினார். தொடர்ந்து கோவில் அர்ச்சகர்கள் திருக்கல்யாணம் வைபவத்தை நடத்தி வைத்தனர். இதில் பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.

விழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் நடந்தது. முன்னதாக அம்மன் கோவிலில் இருந்து சிறப்பு அலங்காரத்தில் புறப்பட்டு, தேரில் எழுந்து அருளினார். பின்னர் தேரை முக்கிய பிரமுகர்கள் வடம் பிடித்து தொடங்கி வைக்கின்றனர். தேர் ராஜ வீதியில் உள்ள தேர் முட்டியில் இருந்து புறப்பட்டு, ஒப்பணக் கார வீதி, வைசாள் வீதி, கருப்ப கவுண்டர் வீதி வழியாக சென்று மீண்டும் தேர் முட்டியை சென்றடைகிறது. தேரோட்டத்தை முன்னிட்டு கோவை மாநகரில் பலத்த காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.




## செய்தி துளிகள்

- திருப்பரங்குன்றம் விவகாரத்தில் உத்தரவை நிறைவேற்றததால் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் விசாரணை தொடங்கியது மலை உச்சியில் பூஜை செய்ய நீதிமன்றம் கூறும் 5 பேரை அனுமதிக்க வேண்டும் என்ற முந்தைய விசாரணை உத்தரவு குறித்து ஆலோசித்து வருவதாக அரசுத் தரப்பு பதில்புதிய வழிபாடுகளை நடைமுறைப்படுத்துவது குறித்து அறங்காவலர்கள் ஆலோசனைதான் கூற முடியும்; முடிவு எடுக்க முடியாது என கோயில் தரப்பில் வாதம்எப்போது நடைமுறைப்படுத்தப் படும் என்று கேட்டுச் சொல்லுங்கள்? நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து எத்தனை மாதம் ஆனது? என நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் கேள்வி.
- “உத்தரவை நிறைவேற்றுவதில் எனது தனிப்பட்ட உத்தரவாகப் பார்க்க வேண்டாம்; நீதிமன்ற உத்தரவாக நிறைவேற்றுங்கள் தற்போது தீபம் ஏற்ற வேண்டாம்; குறைந்தபட்சம் ஐந்து நிமிடம் வழிபாடு செய்வதற்கு அனுமதி கொடுங்கள்” - நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்.
- “கடந்த இரண்டு ஆண்டுகளைக் காட்டிலும் நடப்பாண்டில் கோடை வெயிலுன் தாக்கம் அதிகரித்துக் காணப்படும்” இந்திய புவி அறிவியல் அமைச்சகச் செயலாளர் ரவிச்சந்திரன் சிவகாசியில் பேட்டி.
- மாநிலங்களவைத் தேர்தல் - திருச்சி சிவா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகிய இருவரை வேட்பாளராக அறிவித்த திமுக.
- இந்தியப் பெருங்கடலில் ஈரான் போர்க்கப்பல் தாக்கி அழிப்பு. “1945ம் ஆண்டு 2ம் உலகப் போருக்குப் பிறகு, முதல் முறையாக ஒரு போர்க்கப்பலை Torpedo நீர்மூழ்கிக் குண்டு மூலம் அமெரிக்கா தாக்கி அழித்துள்ளது” -பீட்டர் ஹெக்செத், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர். லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிரான தாக்குதகளை தீவிரப்படுத்தியுள்ள இஸ்ரேலிய வீரர்கள், அந்நாட்டுக்குள் நுழைந்து சரமாரித் தாக்குதல். தெற்கு லெபனானில் உள்ள மக்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என இஸ்ரேல் ராணுவம் எச்சரிக்கை விடுப்பு.
- சமையல் கலைஞர் மாதம்பட்டி ரங்கராஜுக்கு, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் DNA பரிசோதனை நடத்த உயர் நீதிமன்றம் அனுமதி ஜாய் கிரிசில்டா மற்றும் ரங்கராஜ் என தரப்பிலும் இந்த பரிசோதனை நடத்த அனுமதி கோரியிருந்தனர். பரிசோதனை முடிவுகளை மத்தியஸ்தரிடம் சமர்ப்பிக்கவும் உத்தரவு.
- சிவகங்கை மாவட்டம் இலுப்பைக்குடி சிப்காட்டில் ரூ.5300 கோடி முதலீட்டில் புதிய டயர் உற்பத்தி ஆலை அமைக்கிறது MRF நிறுவனம் 1000 பேருக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலான இம்முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.
- கப்பல் கட்டுதல் துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்க, நாட்டின் முதல் மாநிலமாக கப்பல் கட்டுதல் கொள்கையை வெளியிட்டது தமிழ்நாடு அரசு தென்கொரிய நிறுவனமான HD Hyundai நிறுவனம் தூத்துக்குடியில் $2 பில்லியன் முதலீட்டில் கப்பல் கட்டும் தளம் அமைக்க சமீபத்தில் ஒப்பந்தம் கையெழுத்தானது குறிப்பிடத்தக்கது.
- டி20 உலக கோப்பை முதல் அரையிறுதிப் போட்டியில் 20 ஓவர்களில் 169/8 ரன்கள் எடுத்துள்ளது தென்னாப்பிரிக்கா டாப் ஆர்டரை நியூசிலாந்து சிதறடித்தாலும், மார்கோ ஜேன்சென், ப்ரேவிஸ் இருவரும் நிலைத்து ஆடி அணியை தூக்கிப் பிடித்துள்ளனர்.
- திமுகவின் டெல்லி குரல்களில் முக்கியமான ஒருவரான திருச்சி சிவா, 6வது முறையாக மாநிலங்களவைக்கு தேர்வாக உள்ளார். 1996ல் புதுக்கோட்டை மக்களவை தொகுதியில் வென்று முதல் முறையாக நாடாளுமன்றம் நுழைந்தார் திருச்சி சிவா. பின்னர், 2000, 2002, 2007, 2014, 2020 ஆகிய ஆண்டுகளில் மாநிலங்களவைக்கு தேர்வானார்
- திமுக கூட்டணியில் தேமுதிக-வுக்கு ஒரு மாநிலங்களவை சீட் ஒதுக்கீடு. வேட்பாளர் யார் என்பதை இன்று அறிவிக்கிறார் பிரேமலதா விஜயகாந்த்.
- மாநிலங்களவைத் தேர்தலில் அதிமுக சார்பில் தம்பிதுரைக்கு மீண்டும் வாய்ப்பு. மற்றொரு உறுப்பினர் பதவியை அன்புமணிக்கு வழங்க எடப்பாடி பழனிசாமி முடிவு எனத் தகவல்.
- தமிழ்நாட்டில் 6 மாநிலங்களவை இடங்களுக்கான வேட்பாளர்கள் இன்று அறிவிக்க வாய்ப்பு. வேட்புமனு தாக்கல் நாளையுடன் முடிவதால், வேட்பாளர்கள் பெயர்கள் வெளியாகும் என எதிர்பார்ப்பு.
- எடப்பாடி பழனிசாமி தலைமையில் இன்று கூடுகிறது அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம். மாநிலங்களவை தேர்தல் வேட்பாளர்கள் தேர்வு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து ஆலோசனை.
- தமிழ்நாட்டில் விளிம்பு நிலையில் உள்ள 38 லட்சம் பேருக்கு தலா 2 ரூ.1000. முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு, முதியோர், கைம்பெண், மாற்றுத்திறனாளிகள் நன்றி.
- ஈரான் போர் பதற்றம் காரணமாக இந்தியாவில் இருந்து முட்டை ஏற்றுமதி முற்றிலும் நிறுத்தம். நாமக்கல்லில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட மூன்றரை கோடி முட்டைகள் தேக்கம்.
- இந்தியாவின் 4 லட்சம் மெட்ரிக் டன் பாசுமதி அரிசி, துறைமுகங்களில் தேக்கம். சரக்கு கட்டணம் இரு மடங்காக உயர்ந்ததால் ஏற்றுமதியும் குறைந்தது.
- ஈரானில் உயர்மட்ட தலைவர் கமேனி கொல்லப்பட்ட விவகாரத்தில் பிரதமர் மோடி மவுனம் காப்பது ஏன்? கமேனி படுகொலையை மோடி ஆதரிக்கிறாரா என எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கேள்வி.
- ஈரான் மீது 5-வது நாளாக தாக்குதல் நடத்தும் அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டுப்படை. தாக்குதலில் ஈரானில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 787ஆக அதிகரிப்பு.
- ஈரான் பள்ளி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 153 பள்ளி சிறுமிகள் உயிரிழப்பு. 153 உடல்களும் ஒரே இடத்தில் குழிதோண்டி புதைத்து இறுதிச்சடங்கு.

# ஈரானின் நீர்மூழ்கி கப்பல் உட்பட 17 போர்க் கப்பல்கள் அழிப்பு

வாஷிங்டன், மார்ச் 5: ஈரான் மீது அமெரிக்கா நடத்தும் 'எபிக் ஃபியூரி' ஆபரேஷனில் ஈரான் கடற்படையில் இருந்த ஒரு நீர்மூழ்கி கப்பல் உட்பட 17 போர்க் கப்பல்களை அழித்துவிட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அணு ஆயுத தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஈரான் மறுத்ததால், அதன் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த மாதம் 28-ம் தேதி போர் தொடுத்தன. பதில் தாக்குதலில் இறங்கிய ஈரான், அமெரிக்க ராணுவ முகாம்கள் இருக்கும் வளைகுடா நாடுகள் மீது தாக்குதல் நடத்துவதால் மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து 'எபிக் ஃபியூரி' ஆபரேஷன் நடத்தும் அமெரிக்க ராணுவ கமாண்டர் அட்மிரல் பிராட் கூப்பர் நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஆபரேஷன் எபிக் ஃபியூரியின் முதல் 100 மணி நேரத்தில் இதுவரை இல்லாத அளவில் மிகப் பெரிய தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஈரான் மீது 24 மணி நேரமும் தாக்குதல் நடத்தப்படுகிறது. இதுவரை சுமார் 2,000 இலக்குகளை தாக்கியுள்ளோம். ஈரானின் வான் பாதுகாப்பு மோசமான அளவில் பாதிப்படைந்துள்ளது. ஈரானின் நூற்றுக் கணக்கான ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை அழித்துள்ளோம்.

ஈரான் கடற்படையை ஒட்டுமொத்தமாக அழித்துவிட்டோம். ஈரான் கடற்படையில் ஒரு நீர்மூழ்கி கப்பல் உட்பட 17 போர்க்கப்பல்கள் இருந்தன. அனைத்தையும் மூழ்கடித்துவிட்டோம். சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு தடையாக இருந்த ஈரானின் அனைத்து இடங்கள் மீதும் பி-2 குண்டு வீச்சு விமானங்கள், எப்-35 போர் விமானங்கள், டொமஹாக் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பிராட் கூப்பர் கூறினார்.

ஈரான் கடற்படையில் ஐஆர்ஐஎஸ் மக்ரான் என்ற போர்க் கப்பல் இருந்தது. ஆயில் டேங்கர் கப்பலைப் போர்க் கப்பலாக மாற்றி ஈரான் பயன்படுத்தி வந்தது. ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் முகாமிட்டிருந்த இந்த கப்பலை அமெரிக்க கடற்படை தாக்கி செயல் இழக்கச் செய்தது. ஈரான் கடற்படையில் பகேரி என்ற போர்க் கப்பல் கடந்தாண்டு சேர்க்கப்பட்டது. இதில் ட்ரோன்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் இருந்தன. இதையும் அமெரிக்க கடற்படை தாக்கி மூழ்கடித்துவிட்டது.

ஜமரான் என்ற போர்க் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது. இதே போல் ஈரான் கடற்படையில் இருந்த சாஹந்த், சபாலன், பேயந்தர், நக்தே ஆகிய போர்க்கப்பல்களையும் அமெரிக்க கடற்படை தாக்கி அழித்துள்ளது. இதேபோல் ஈரானின் நீர்மூழ்கி கப்பலை பந்தர் அப்பாஸ் பகுதியில் அமெரிக்கா மூழ்கடித்தது. தரேக் என்ற நீர்மூழ்கி உட்பட பல சிறிய நீர்மூழ்கி படகுகளையும் அமெரிக்கா மூழ்கடித்தது.

இறுதியாக இந்தியாவுடன் விசாகப்பட்டினத்தில் மிலன் 2026 கூட்டுப் பயிற்சியை முடித்துவிட்டு திரும்பிய ஈரானின் தேனா என்ற போர்க் கப்பலை இலங்கை அருகே, இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் டார்பிடோ குண்டுகளை ஏவி நேற்று அதிகாலை மூழ்கடித்தது. இதில் 80 வீரர்கள் உயிரிழந்தனர். இங்கு இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை மீட்பு பணியை மேற்கொண்டது. ஈரான் கடற்படையில் மொத்தம் இருந்த 17 போர்க் கப்பல்களையும் அமெரிக்க கடற்படை அழித்து விட்டதால் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனினும், ட்ரோன்கள், ஏவுகணைகள் மூலம் ஈரானும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் வளைகுடா நாடுகளுடன் ஒட்டுமொத்த மத்திய கிழக்குப் பகுதிகளிலும் போர்ப் பதற்றம் நீடிக்கிறது.








## ரூ.2,975 கோடி மதிப்பில் திட்டப்பணிகள்:

# பயன்பாட்டுக்கு கொண்டுவந்தார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, மார்ச் 5: காவல், விளையாட்டு, நகராட்சி நிர்வாகம், வேளாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.2,974.93 கோடி மதிப்பிலான பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று பொது மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார். இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், காவல் துறை சார்பில் ரூ.75.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 200 காவலர் குடியிருப்புகள், 2 காவல் நிலையங்கள், 8 காவல் துறை இதர கட்டிடங்கள், ரூ.15 கோடி செலவில் 22 காவல் பயிற்சி மையங்களில் அமைக்கப்பட்டுள்ள திறன்மிகு வகுப்பறைகளை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். அத்துடன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 2,138 அடுக்குமாடி குடியிருப்புகளை காவல் துறைக்கு வழங்கினார்.

தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் ரூ.42.94 கோடியில் கட்டப்பட்ட 14 விளையாட்டுத் துறை கட்டிடங்களைத் திறந்துவைத்து, ரூ.37.84 கோடி மதிப்பிலான 3 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ரூ.1,404.27 கோடி செலவில் 6 முடிவுற்ற பணிகள், சென்னை குடிநீர் வாரியம் சார்பில் ரூ.529.54 கோடியில் 16 முடிவுற்ற பணிகள், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சார்பில் ரூ.349.76 கோடியில் முடிவுற்ற 93 பணிகள், பேரூராட்சிகள் இயக்குநரகம் சார்பில் ரூ.389.93 கோடியில் 76 முடிவற்ற பணிகள், சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.59.27 கோடியில் 38 பணிகள் என ரூ.2,732.77 கோடி மதிப்பிலான 227 முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டுக்கு முதல்வர் திறந்து வைத்தார்.

இதுதவிர, சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.27.59 கோடியில் 9 புதிய திட்டப் பணிகள், சென்னை குடிநீர் வாரியம் சார்பில் ரூ.495.29 கோடியிலான 2 திட்டப்பணிகள், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சார்பில் ரூ.132.48 கோடியிலான 8 புதிய திட்டப்பணிகள் என ரூ.655.36 கோடியிலான 19 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

கிண்டி பூங்கா அடிக்கல்: வேளாண் துறை சார்பில் சென்னை கிண்டியில் சுற்றுச் சூழல் பூங்காவை பெரியவர்கள், குழந்தைகளை மகிழ்விக்கும் வகையில், கருத்தியல் தோட்டங்கள், குழந்தைகள் விளையாடும் திடல்கள், பறவைத் திட்டுகள், நீரியல் தோட்டம், புல்வெளிகள், காட்சி மேடைகள், நிழல் நடைபாதைகள் போன்ற கட்டமைப்புகளுடன் ரூ.37.85 கோடியில் அமைக்கப்படும் பூங்காவுக்கான முதல்கட்ட பணிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். அத்துடன், சென்னை கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவில் நாட்டிலேயே முதல்முறையாக ரூ.11.84 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 30 மீட்டர் உயர செங் குத்துத் தோட்டத்துடன், 9 அடுக்குகளைக் கொண்ட உலகத்தரத்திலான 'உயர் கோபுர மரத்தை' திறந்துவைத்தார்.

அத்துடன், தமிழகத்தில் வனங்கள் மற்றும் மரங்களால் சூழப்பட்டுள்ள பரப்பை 33 சதவீதமாக மாற்றும் குறிக்கோளை அடையும் வகையில் 'தமிழ்நாடு வேளாண் காடுகள் வளர்ப்புக் கொள்கை 2026'-ஐ வெளியிட்டார்.

இதுதவிர, சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் ரூ.63 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 'முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கத்தை' திறந்து வைத்தார். மேலும், 'உலகம் உங்கள் கையில்' திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

வருவாய்த்துறை சார்பில் ரூ.7.65 கோடியில் கட்டப்பட்டுள்ள 2 வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், ரூ.4.54 கோடியில் கட்டப்பட்ட ஒரு வட்டாட்சியர் அலுவலகம், ரூ.40.73 லட்சத்தில் கட்டப்பட்ட வட்டாட்சியர் குடியிருப்பு மற்றும் ரூ.3.60 கோடியில் கட்டப்பட்ட 10 வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு கட்டிடங்களையும் திறந்து வைத்தார். இந்த நிகழ்வுகளில், அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.






Owned, Printer and Published by **G.SASIREKA** from No: 64/80, Vivehananda Colony, Vadapalani, Chennai - 26, Printing at Annai Abirami Achagam, No: 24, Venguchetty Street, Poonga Nagar, Chennai - 3. Editor: **V.S.N.SHARMA.**